**Cross Examination**
**Dated:24.08.2022**

டி.ஒ.எஸ்.எண். 233/2021, RW2, திரு. விஜயகுமார், த/பெ.

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**குறுக்கு விசாரணை**

வழக்கு சொத்து என் அம்மா பெயரில் கிரையம் ஏற்பட்டு வீடு கட்டப்பட்டுள்ள சொத்து என்றால் சரிதான். எனது அம்மாவிற்று வீட்டை யாருக்கு வேண்டுமானாலும் உயில் எழுதி வைப்பதற்கு அதிகாரம் உண்டு என்றால் சரிதான். எனது அம்மா சொத்தை எழுதி வைத்ததால்தான் இந்த வழக்கை நடத்துகிறேன் என்றால் போலியாக உயில் தயாரித்ததால் இந்த வழக்கை நடத்துகிறோம். உயிலில் உள்ள கையெழுத்து என் அம்மாவினுடையதுதான் என்றால் எனக்கு தெரியாது. எனக்கு தெரியாது என்று என்னுடைய முதல் விசாரணையிலோ, பதிலுரையிலோ சொல்லவில்லை என்றால் சரிதான். எனக்கு 2001ம் வருடம் திருமணமானது. திருமணத்திற்கு பிறகு நான் 2006ம் வருடத்திலிருந்து தனிக்குடித்தனம் நடத்தி வருகிறேன் என்றால் சரிதான். எனது அப்பாவின் ஓய்வூதியத்தை நான் வங்கி கணக்கு வைத்திருக்கும் வங்கியில் மாற்றி வைத்துள்ளேன் என்றால் குடும்ப ஓய்வூதியத்திற்காக மாவட்ட கருவூலத்தில் சொன்னதன் படி மாற்றப்பட்டுள்ளது. என் தகப்பனார் இறந்ததற்கு பின்னர் நான்தான் குடும்பத்தை நிர்வாகம் செய்து வந்தேன் என்றால் எனது திருமணத்திற்கு பிறகு நான் தனியாக வந்துவிட்டேன். நான் வீடு கட்டியிருப்பது என் தகப்பனார் வங்கி கணக்கில் இருந்த பணத்தை எடுத்துதான் கட்டினேன் என்றால் சரியல்ல. நான் லோன் வாங்கி வீடு கட்டினேன். வாதி பாலகிருஷ்ணனுக்கு 2013ம் வருடம் திருமணமானது. அவர் என்ன வேலை செய்கிறார் என்று எனக்கு தெரியாது. வாதி பாலகிருஷ்ணன் அவருடைய திருமணத்தை அவரே செய்து கொண்டார் என்றாலும் அதனால் என் தாயார் உயிலில் சொத்துக்களை அவருக்கு எழுதி வைத்துள்ளார் என்றால் சரியல்ல. உயில் எழுதி வைத்த விபரம எனக்கு தெரியும் என்றாலும், அவருக்கு சொத்து கிடைக்க கூடியது என்று பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. எனது முதல் விசாரணையில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் பொய் என்றால் சரியல்ல.

3ம் பிரதிவாதி தரப்பில் கு.வி -இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
புதுக்கோட்டை.